# 21

# கிறிஸ்தவ குடும்பம்

தேவனே குடும்பங்களைக் குறித்த நியமத்தை உண்டாக்கியவராவார். எனவே அவர் குடும்பங்கள் எபபடிச் செயல்பட வேண்டும் என்று நமக்குப் போதித்து, குடும்பங்களை அழித்துப்போடும் படுகுழியிலிருந்து எப்படித் தப்ப வேண்டும் என்று எச்சரிக்கக் கூடியவராக இருக்கிறார். குடும்பத்தின் வடிவமைப்பைக் குறித்து அவர் வேதாகமத்தில் பல கொள்கைகளைக் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரும் செய்ய வேண்டிய பங்கைக் குறித்தும் அவர் சொல்லியிருக்கிறார். இந்த வேதாகமரீதியான வழிமுறைகளைப் பின்பற்றும்போது, குடும்பங்கள்அனுபவிக்க வேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டிருக்கும் ஆசீர்வாதங்களை அவர் அவர்களுக்கு அருளுகிறார். அவைகளை மீறும்போது, அழிவும் இருதய வேதனை யுமே எஞ்சியிருக்கின்றன.

### கணவன் மற்றும் மனைவியின் பங்கு

ஒரு கிறிஸ்தவ குடும்பம் ஒரு குறிப்பிட்ட வடிவமைப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் ஒழுங்குபடுத்தியிருக்கிறார். இந்த வடிவமைப்பு குடும்ப வாழ்க்கைக்கு ஸ்திரத்தன்மையைக் கொடுக்கிறபடியால், சாத்தான் தேவனுடைய வடிவமைப்பைச் சிதைக்க முயலுகிறான்.

முதலாவதாக, கணவன் குடும்பத்தின் தலையாக இருக்க வேண்டும் என்று தேவன் ஒழுங்குபடுத்தியிருக்கிறார். இது கணவன் தனது மனைவியின்மீதும் பிள்ளைகளின்மீதும் சுயநலமாக அதிகாரம் செலுத்தும் உரிமையை அவனுக்குக் கொடுக்கவில்லை. கணவன் தலையாக இருந்து, அன்புகாட்டி, குடும்பத்தைக் காத்து, தேவனையான வைகளைக் கொடுத்து, குடும்பத்தை வழிநடத்தும்படியாகவே தேவன் அழைத்திருக்கிறார். மனைவி தன் கணவனின் தலைமைத்துவத்துக்குத்

தன்னைக் கீழ்ப்படுத்த வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாகும். வேதவசனத்தில் இது தெளிவாக இருக்கிறது:

> மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் [எபே. 5:22—24].

ஒரு கணவன் தனது மனைவிக்கு *ஆவிக்குரிய* தலையாக இருக்கவில்லை. இயேசுவானவரே அந்தப் பங்கை வகிக்கிறார். இயேசுவானவர் சபையின் ஆவிக்குரிய தலையாக இருக்கிறார். தனது கிறிஸ்தவ கணவனைப்போலவே மனைவியும் சபையில் அங்கமாக இருக்கிறாள். என்றாலும், கிறிஸ்தவ குடும்பத்தில் கணவனே மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் தலையாக இருக்கிறான். அவர்கள் தேவனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்துக்குக் கீழ்ப் பட்டிருக்க வேண்டும்.

எந்த அளவுக்கு ஒரு மனைவி கணவனுக்குத் தன்னைக் கீழ்ப்படுத்த வேண்டும்? பவுல் சொல்லியதுபோல எல்லாவற்றிலேயும் அவள் அவனுக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும். அவள் தேவனுடை.ய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமலிருக்க வேண்டும், தனது மனச்சாட்சியை மீறி ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று அவன் எதிர்பார்த்தால் மட்டுமே அவள் இதிலிருந்து விதிவிலக்கைப் பெறுகிறாள். கணவன் தனது மனைவியின் ஆண்டவன் அல்ல, இயேசுவானவரே அவளுடைய வாழ்க்கையில் இந்த இடத்தைப் பெற்றிருக்கிறார். யாருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதை அவள் தெரிந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்படுமானால், அவள் இயேசுவானவரையே தெரிந்துகொள்ள வேண்டும்.

தேவன் எப்போதுமே ‘‘கணவனின் பக்கமாகவே’’ இருப்பார் என்று கணவன்மார் எதிர்பார்க்கக் கூடாது. தேவன் ஒருமுறை ஆபிரகாமிடம் அவன் தன் மனைவியாகிய சாராள் சொல்லியதைச் செய்ய வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார் [பார்க்க, ஆதி. 21:10—12]. அபிகெயில் தனது முட்டாள் கணவன் நாபாலுக்குக் கீழ்ப்படியாமல், ஒரு பெரிய அழிவைத் தவிர்த்தாள் என்று வேதாகமத்தில் நாம் வாசிக்கிறோம் [பார்க்க, 1 சாமு. 25:2—38].

### கணவன்மாருக்குத் தேவனுடைய வார்த்தை

கணவன்மார்களுக்குத் தேவன் இவ்வாறு சொல்லுகிறார்:





> புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து... அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும் அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்... எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள் [எபே. 5:25. 28—30, 33].

கிறிஸ்து சபையினிடத்தில் அன்புகூருவதுபோலக் கணவன் தன் மனைவியினிடத்தில் அன்புகூர வேண்டும் என்ற கட்டளை கொடுக்கப் பட்டுள்ளது. இது சிறியதொரு பொறுப்பு அல்ல! தியாக அன்போடு தமது சொந்த ஜீவனையே கொடுத்த இயேசுவைப் போலக் கணவன் அன்புகூருவான் என்றால் அப்படிப்பட்ட கணவனுக்கு எந்தவொரு மனைவியும் சந்தோஷமாகக் கீழ்ப்படிவாள். கிறிஸ்து தமது சொந்த சரீரமாகிய சபையின்மீது அன்புகூருவதுபோல, கணவன் தன்னோடு ‘‘ஒரே மாம்சமாக இருக்கிற’’ மனைவியின்மீது அன்புகாட்ட வேண்டும் [எபே. 5:31]. ஒரு கிறிஸ்தவ கணவன் தன் மனைவியை நேசிக்க வேண்டியபடி நேசிப்பான் என்றால் அவன் அவள் தேவைகளைச் சந்திப்பான், அவளுக்காகக் கரிசனைகொள்ளுவான், அவளுக்கு மரியாதை காட்டுவான், அவளுக்கு உதவிசெய்வான், அவளை ஊக்குவிப்பான், அவளோடு நேரம் செலழிப்பான். தனது மனைவிடம் அன்புகாட்டும் பொறுப்பில் அவன் தோற்றுப்போவான் என்றால், அது கணவனுக்கு அவனுடைய ஜெபங்களில் தடையாக இருக்கும்.

> அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், *உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு*, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடன் வாழ்ந்து, உங்களுடனேகூட *அவர்களும் நித்தியஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்* [1 பேதுரு 3:7 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

பிணக்குகளும், கருத்துவேறுபாடுகளும் இல்லாத திருமண வாழ்க்கை கிடையாது. ஒப்படைப்பின் மூலமாகவும், நமது சொந்த வாழ்க்கையில் ஆவியின் கனியை வளர்த்துக்கொள்ளுவதின் மூலமாகவும், கணவனும் மனைவியும் ஒத்திசைவோடு வாழக் கற்றுக்கொள்ள முடியும். கிறிஸ்தவ திருமண உறவின் எப்போதும் அதிகரிக்கும் ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியும். எல்லாத் திருமண உறவுகளிலும் எழும் தவிர்க்க முடியாத பிரச்சினைகளின் மூலமாக தம்பதியர் கிறிஸ்துவைப் போலாகுவதில் அதிகமான முதிர்ச்சிக்கு வளரக் கற்றுக்கொள்ள முடியும்.

கணவன் மற்றும் மனைவின் கடமைகளைக் குறித்து மேலும் ஆய்வு செய்ய, பார்க்கவும்: ஆதி. 2:15–25; நீதி. 19:13; 21:9,19; 27:15,16; 31:10–31; 1 கொரி. 11:3; 13:1–8; கொலோ. 3:18–19; 1 தீமோ. 3:4–5; தீத்து 2:3–5; 1பேதுரு 3:1–7.

### திருமணத்தில் பாலுறவு

தேவன்தாமே மக்கள் பெருக்கத்துக்காகவும், இன்பத்துக்காகவும் முதலில் பாலுறவை நிர்ணணம் செய்தவராவார். வாழ்நாள் முழுவதற்குமான திருமண உடன்படிக்கையினால் பிணைக்கப்பட்டுள்ளவர்கள் மட்டுமே இதில் ஈடுபட வேண்டும் என்று வேதாகமம் அறிவிக்கிறது.

திருமண உறவுக்கு அப்பாற்பட்ட பாலுறவுகளை வேசித்தனம் அல்லது விபசாரம் என்று வகைப்படுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரிக்க முடியாது என்று பவுல் சொல்லியிருக்கிறார் [பார்க்க, 1 கொரி. 6:9–11]. ஒரு கிறிஸ்தவன் சோதிக்கப்பட்டு விபசாரத்திலோ அல்லது வேசித்தனத்திலோ விழுவான் என்றாலும் அவனுடைய ஆவியில் அவன் அதிகமான குற்ற உணர்வைப் பெறுகிறபடியால், அது அவனை மனந்திரும்புதலுக்கு வழிநடத்தும்.

கணவன் மற்றும் மனைவியின் பாலுறவுப் பொறுப்புகளைக் குறித்துப் பவுல் அப்போஸ்தலன் சிறப்பான அறிவுரைகளைக் கொடுத்திருக்கிறார்:

> ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன்தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும். புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள். மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி.





> உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள் [1 கொரி. 7:2–5].

கணவனோ அல்லது மனைவியோ பாலுறவை ஒரு ''பரிசாகப்'' பயன்படுத்தக் கூடாது என்று இந்த வசனங்கள் எச்சரிக்கின்றன. ஏனென்றால் இருவரும் தங்கள் சொந்தச் சரீரத்தின்மீது அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

மேலும் பாலுறவு என்பது தேவனால் கொடுக்கப்பட்ட ஈவாகும். அது திருமண உறவின் எல்லையைக் கடக்காவிட்டால், அது பரிசுத்தமில்லாததோ அல்லது பாவகரமானதோ அல்ல. திருமணமான கிறிஸ்தவ தம்பதியர் பாலுறவில் ஈடுபட வேண்டும் என்று பவுல் ஊக்குவித்திருக்கிறார். மேலும், நீதிமொழிகளின் புத்தகத்தில் கிறிஸ்தவ கணவன்மாருக்கு இந்த ஆலோசனை கொடுக்கப்பட்டுள்ளது.

> உன் ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு. அவளே நேசிக்கப்படத்தக்க பெண்மானும், அழகான வரையாடும் போலிருப்பாளாக; அவளுடைய ஸ்தனங்களே எப்பொழுதும் உன்னைத் திருப்திசெய்வதாக; அவளுடைய நேசத்தால் நீ எப்பொழுதும் மயங்கியிருப்பாயாக [நீதி. 5:18–19]. [58]

கிறிஸ்தவ தம்பதியர் பாலுறவில் பரஸ்பர திருப்தியை அனுபவிக்க வேண்டும். ஆண்கள் மற்றும் பெண்களுடைய பாலுறவு இயல்புகளுக்கு இடையே பெரிய வேறுபாடு இருக்கிறது என்பதைக் கணவனும் மனைவியும் அறிய வேண்டும். ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஆணின் பாலுறவு இயல்பு பெரும்பாலும் சரீரப்பிரகாரமானது, பெண்ணின் இயல்பு உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டது. ஆண்கள் கண்களினால் பார்ப்பதினாலேயே பாலுறவுரீதியான கிளர்ச்சியை அடைகிறார்கள். [பார்க்க, மத். 5:28]. ஆனால் பெண்களின் உணர்வு தொடுதலின் மூலமாகவே தூண்டப்படுகிறது [பார்க்க, 1 கொரி. 7:1]. ஆண்கள் தங்கள் கண்களுக்குக் கவர்ச்சியாக இருக்கும் பெண்களோடு பாலுறவு கொள்ளும்படி இழுக்கப்படுகிறார்கள். பெண்களும்கூட பாலுறவுரீதியாக ஆண்களால் கவர்ந்திழுக்கப்பட்டாலும், வெறும் சரீரப்பிரகாரமான காரியங்களுக்கு அப்பால் பிற காரியங்களை அவர்கள் கருதுகிறார்கள்.

[58] மேலும் அதிகமான நிருபணத்துக்குப் பார்க்கவும்: உன்னதப்பாட்டு 7:19; லேவியராகமம் 18:1–23].

இப்படியாக ஞானமுள்ள மனைவி எப்போதும் தன் கணவனைச் சந்தோஷப்படுத்துவதை நாடுகிறாள். ஞானமுள்ள கணவன் நாளின் முடிவில் மனைவி தனக்காக ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமல். பகல் முழுவதும் அன்பான அரவணைப்பினாலும், தயவுள்ள செயல்களினாலும் அவளை மகிழ்விக்க வேண்டும்.

ஒரு ஆணின் சரீரத்தில் விந்து அதிகரிக்கும்போது அவனுடைய பாலுறவு விருப்பமும் அதிகரிக்கிறது. ஆனால் ஒரு பெண்ணின் மாதவிடாய் சுழற்சியைச் சார்ந்து அதிகரிக்கிறது அல்லது குறைகிறது. ஆண்களால் ஒருசில வினாடிகள் அல்லது நிமிடங்களில் உச்சக்கட்டத்தை எட்டிவிட முடியும், ஆனால் பெண்களுக்கு நேரம் அதிகமாகிறது. ஒரு ஆண் பாலுறவுக்காக ஒருசில நிமிடங்களுக்குள் சரீரப்பிரகாரமாக ஆயத்தமாகிவிடும் வேளையில், பெண்ணுக்குக் குறைந்தபட்சம் அரை மணி நேரமாவது ஆகிறது. ஞானமுள்ள கணவன் அன்பான அரவணைப்பாலும், முத்தங்களாலும், கைகளினால் அவளுடைய சரீரத்தில் தூண்டிவிடுவதினாலும், அவளைப் பாலுறவுக்கு ஆயத்தமாகும்படி செய்கிறான். அவளுக்குக் கிளர்ச்சியைக் கொடுக்கும் அவளுடைய சரீரத்தின் பகுதிகள் எவை என்று அவனுக்குத் தெரியாவிட்டால் அவன் அவளிடம் கேட்க வேண்டும். மேலும் தன்னால் ஒரேயொரு உச்சத்தை மட்டும் எட்ட முடியும்போது, தன் மனைவியால் பல உச்சங்களை எட்ட முடியும் என்பதையும் அவன் உணர்ந்திருக்க வேண்டும். அவளுக்கு விருப்பமானதை அவள் பெறுகிறாளா என்று அவன் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவ கணவனும் மனைவியும் தங்கள் தேவைகளை ஒருவர் மற்றவரோடு நேர்மையாகப் பகிர்ந்துகொண்டு, எப்படி எதிர்பாலார் தன்னைவிட வேறுபடுகிறார்கள் என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். மாதங்களும் ஆண்டுகளும் கடக்கும்போது, தொடர்புகொள்ளுதல், கண்டுபிடித்தல், செயல்படுத்துதல் இவைகளின் மூலமாக கணவனும் மனைவியும் தங்கள் பாலுறவில் எப்போதும் அதிகரிக்கும் ஆசீர்வாதங்களைப் பெற முடியும்.

### கிறிஸ்தவ குடும்பத்தில் பிள்ளைகள்

சிறுபிள்ளைகள் தங்கள் கிறிஸ்தவப் பெற்றோருக்கு முழுவதுமாகக் கீழ்ப்படியும்படி அவர்களுக்குப் போதிக்க வேண்டும். அப்படி அவர்கள் செய்யும்போது, நீண்ட ஆயுளும் மற்ற ஆசீர்வாதங்களும் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளன:

> பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும்





> கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது [எபே. 6:1–3].

குடும்பத்தில் தலையாக இருக்கும் கிறிஸ்தவ தகப்பன்மாருக்குத் தங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கும் அடிப்படைப் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது:

> பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப் படுதாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனை யிலும் அவர்களை வளர்ப்பீர்களாக [எபே. 6:4].

ஒரு தகப்பனின் பொறுப்பு இரட்டைப் பொறுப்பு என்பதைக் கவனியுங்கள். முதலில் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் பிறகு போதனையிலும் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். இப்போது பிள்ளைகளைச் சிட்சிக்க வேண்டியதின் அவசியத்தைப் பார்ப்போம்.

### பிள்ளைகளைச் சிட்சித்தல்

சிட்சிக்காமல் வளர்க்கப்படும் சிறுபிள்ளை சுயநலமுள்ளவனாகவும், அதிகாரத்தை எதிர்த்துக் கலகம்செய்கிறவனாகவும் வளருவான். பெற்றோர்களால் ஏற்கெனவே நியாயமான விதிகளுக்குக் கீழ்ப்படியாமல் சிறுபிள்ளைகள் *எதிர்த்து நிற்கும்போது*, எந்த வேளையிலும் அவர்கள் சிட்சிக்கப்பட வேண்டும். தவறுகளுக்காகவோ அல்லது சிறுபிள்ளைத் தனமான பொறுப்பின்மைக்கோ பிள்ளைகளைத் தண்டிக்கக் கூடாது. ஆனால் அவர்கள் தங்கள் தவறுகள் மற்றும் பொறுப்பின்மையின் பின்விளைவுகளை ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டும். இப்படியாகப் பெரியோரின் வாழக்கை உண்மைகளுக்காக அவர்களை ஆயத்தம்செய்ய வேண்டும்.

தேவனுடைய வார்த்தை சொல்லுகிறபடி அடிப்பதின் மூலமாகச் சிறுபிள்ளைகளுக்குச் சிட்சையளிக்க வேண்டும். மிகவும் சிறிய குழந்தைகளை அடிக்கக்கூடாது. அதற்காகச் சிறு குழந்தைகள் தாங்கள் விரும்பிய வழியில் செல்லும்படி அனுமதிக்க வேண்டும் என்று அர்த்தமாகாது. உண்மையில், பிறப்பிலிருந்தே தகப்பனும் தாயுமே பொறுப்பில் இருக்கிறார்கள் என்பதை அதற்கு உணர்த்த வேண்டும். மிகவும் சிறிய வயதிலேயே ‘‘செய்யக் கூடாது’’ என்றால் தாங்கள் செய்துகொண்டிருக்கும் அல்லது செய்யப்போகும் காரியத்தை நிறுத்தி விட வேண்டும் என்பதை அவர்கள் அறிய வேண்டும். ‘‘செய்யக் கூடாது’’ என்பதை அவர்கள் புரிந்துகொள்ளத் துவங்கும் வேளையில் செய்யக் கூடாத ஒன்றை நிறுத்தாமல் செய்துகொண்டிருப்பார்களானால், அதை உணர்த்த பின்பக்கத்தில் கையால் ஒரு அறை கொடுத்தால் அதை அவர்களுக்கு உணர்த்த அது போதுமானதாகும். இதைத் தொடர்ந்து செய்து வந்தால் சிறுபிள்ளைகள் சிறு வயது முதலே ஒழுக்கத்தோடு நடக்கத் துவங்கிவிடுவார்கள்.

பிள்ளையின் அழுகையை நிறுத்துவதற்காக அது விரும்புவதை உடனே கொடுப்பதற்கு மாறாக, தங்கள் பிள்ளைகளில் காணப்படும் விருப்பமில்லாத நடத்தையைப் பெற்றோர் உடனடியாக அதிகாரத்தோடு கண்டிக்க வேண்டும். சிறுபிள்ளைகள் அழுது அடம்பிடிக்கப் பழகி விட்டால் பிறகு தான் விரும்பியதைப் பெற இதே யுக்தியைக் கையாளத் துவங்கிவிடும். இப்படிப்பட்ட வேளைகளில் பெற்றோர் அவர்கள் கேட்பதைக் கொடுப்பார்களானால், உண்மையில் அவர்கள் விரும்பத் தகாத நடத்தையைத் தங்கள் பிள்லைகளில் ஊக்குவிப்பதாக ஆகி விடும். ஞானமுள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகள் விரும்பத்தகுந்த வகையில் நடக்கும்போது மட்டுமே அவர்களுக்குப் பரிசளிக்கிறார்கள்.

பிரம்பினால் அடிப்பது சரீரப்பிரகாரமான காயத்தை உண்டுபண்ணி விடக் கூடாது. ஆனால் கீழ்ப்படியாத பிள்ளை சிறிது நேரம் அழும்படி அது வேதனையை உண்டாக்க வேண்டும். இந்த வகையில் சிறுபிள்ளை கீழ்ப்படியாமையோடு வேதனையைத் தொடர்புபடுத்தக் கற்றுக் கொள்ளுவான். வேதாகமம் இதை உறுதிப்படுத்துகிறது:

> பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்; அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கெனவே தண்டிக்கிறான்... பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்; அதைத் தண்டனையின் பிரம்பு அவனை விட்டு அகற்றும்... பிள்ளையைத் தண்டியாமல் விடாதே; அவனைப் பிரம்பனால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பனால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே... பிரம்பும் கடிந்து கொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான் [நீதி. 13:24; 22:15; 23:13–14; 29:15].

பெற்றோர் தங்கள் விதிகளைச் செயல்படுத்தும்போது, பிள்ளைகள் கீழ்ப்படியும்படி அவர்களை அச்சுறுத்த வேண்டிய அவசியமில்லை. ஒரு சிறுபிள்ளை வேண்டுமென்றே கீழ்ப்படியாமல் இருக்கும்போது, பிரம்பினால் அவனைத் தண்டிக்க வேண்டும். கீழ்ப்படியாத பிள்ளையை வெறுமனே பிரம்பினால் அடிக்கப்போவதாக *அச்சுறுத்தினால்*, அது அவனுடைய கீழ்ப்படியாமையை வலுப்படுத்தவே செய்யும். இதன் விளைவாக, தனது பெற்றோரின் வாய்மொழியான அச்சுறுத்தல் உச்சக் கட்டத்தை எட்டும் வரையில் கீழ்ப்படிவதைக் குறித்துச் சிறுபிள்ளை கவலைப்படாதவனாகவே இருப்பான்.

பிரம்புத் தண்டனை நிறைவேற்றப்பட்ட பிறகு, சிறுபிள்ளையைக் கட்டியணைத்து, பெற்றோரின் அன்பை உறுதிப்படுத்த வேண்டும்.





**பிள்ளைகளுக்குப் பயிற்சியளித்தல்**

தங்கள் பிள்ளைகளுக்குப் போதித்து அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது என்று கிறிஸ்தவ பெற்றோர் உணர வேண்டும். நீதிமொழிகள் 22:6 வசனம் ‘‘பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை *நடத்து*; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்’’ என்று சொல்லுகிறது [அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

பயிற்சியளிப்பது என்றால் கீழ்ப்படியாமைக்குத் தண்டனை கொடுப்பது மட்டுமல்ல, நல்ல நடத்தைக்காகப் பரிசளிப்பதுமாகும். பிள்ளைகளின் நல்ல நடத்தையை உறுதிப்படுத்தும்படியாசகப் பெற்றோர் தொடர்ந்து அவர்களைப் பாராட்ட வேண்டும். தாங்கள் தங்கள் பெற்றோரால் நேசிக்கப்படுகிறோம், ஏற்றுக்கொள்ளப்படுகிறோம், பாராட்டப்படுகிறோம் என்று சிறுபிள்ளைகளுக்கு உறுதிப்படுத்துவது அவசியமாகும். பாராட்டுதல், கட்டியணைத்து முத்தமிடுதல், பிள்ளைகளோடு நேரத்தைச் செலவிடுதல் இவைகளின் மூலமாகப் பெற்றோர் தங்கள் அன்பைக் காட்ட முடியும்.

‘‘நடத்து’’ என்றால் ‘‘கீழ்ப்படியும்படி செய்’’ என்று அர்த்தமாகும். எனவே கிறிஸ்தவ பெற்றோர் தங்கள் பிள்லைகள் சபைக்கு வருகிறார்களா அல்லது இல்லையா, ஒவ்வொரு நாளும் ஜெபிக்கிறார்களா அல்லது இல்லையா என்று இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பைக் கொடுக்கக் கூடாது. தங்களுக்கு எது நல்லது என்று அறியத்தக்க பொறுப்பைச் சிறுபிள்ளைகள் பெற்றிருக்கவில்லை. எனவேதான் தேவன் அவர்களுக்குப் பெற்றோரைக் கொடுத்திருக்கிறார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளைச் சரியாக நடத்தும்படி தங்கள் பலத்தையும் நேரத்தையும் முதலீடு செய்வார்களானால், சிறுபிள்ளைகள் வளரும்போதும் சரியான பாதையை விடாதிருபபார்கள் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நீதிமொழிகள் 22:6 வசனத்தில் நாம் அதைப் பார்க்கிறோம்.

சிறுபிள்ளைகள் வளர வளர அவர்களுக்கு அதிகமான பொறுப்புகள் கொடுக்கப்பட வேண்டும். பிள்ளைகளைச் சிறப்பாக வளர்ப்பதின் இலக்கு அவர்கள் பெரியவர்களாகும்போது முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளும்படி அவர்களைப் படிப்படியாக ஆயத்தம்செய்வதாகும். சிறுபிள்ளை வளர வளர அவனாகவே தீர்மானங்களை எடுக்கும்படி அவனுக்கு அதிகமான சுதந்திரத்தைக் கொடுக்க வேண்டும். மேலும் இளம்வாலிபர்கள் தாங்களே தங்கள் தீர்மானத்தின் பின்விளைவுகளை ஏற்றுக்கொள்ளும் பொறுப்பைப் பெற்றிருக்கிறோம் என்பதையும், எப்போதுமே பெற்றோர் சிக்கலிலிருந்து தங்களைக் காப்பாற்ற வரமாட்டார்கள் என்பதையும் உணரும்படி செய்ய வேண்டும்.

### போதனை கொடுக்க வேண்டிய பெற்றோரின் பொறுப்பு

எபேசியர் 6:4 வசனத்தில் நாம் பார்க்கிறபடி தங்கள் பிள்ளைகளைச் சிட்சிக்கும் பொறுப்பை மட்டுமல்ல, அவர்களைக் கர்த்தருக்கேற்ற *போதனையில்* வளர்க்கும் பொறுப்பையும் தகப்பன்மார் பெற்றிருக் கிறார்கல். வேதாகமரீதியான நல்லொழுக்கத்திலும், கிறிஸ்தவ பண்பிலும், இறையியலிலும் போதனை கொடுப்பது சபையின் பொறுப்பல்ல, அது தகப்பனின் பொறுப்பாகும். தேவனைப் பற்றிப் போதிக்கும் முழுப் பொறுப்பையும் ஞாயிறு பள்ளி ஆசிரியரிடம் சமர்ப்பிக்கும் பெற்றோர் பெரிய தவறைச் செய்கிறார்கள். தேவன் மோசேயின் மூலமாக இஸ்ரவேலருக்கு இந்தக் கட்டளையைக் கொடுத்தார்:

> இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ *அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து*, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி,,, [உபா. 6:6–7 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

கிறிஸ்தவ பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குச் சிறு வயதிலிருந்தே தேவன் யார், அவர் எவ்வளவாக அவர்களிடம் அன்புகாட்டுகிறார் என்பதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். சிறு பிள்ளைகளுக்கு இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை, மரணம், உயிர்த் தெழுதல் இவைகளைக் குறித்துப் போதிக்கவேண்டும். ஐந்து அல்லது ஆறு வயதிலேயே பல சிறுபிள்ளைகளால் சுவிசேஷச் செய்தியைப் புரிந்துகொண்டு ஆண்டவரைச் சேவிக்கும்படியான தீர்மானத்தை எடுக்க முடியும். விரைவிலேயே [ஆறு அல்லது ஏழு வயதில், சில வேலைகளில் அதைவிட இள வயதில்] அவர்கள் பரிசுத்த ஆவியான வரின் ஞானஸ்நானத்தையும் பெற்று, அதன் நிரூபணமாக அந்நிய பாஷையில் பேசவும் முடியும். ஒவ்வொரு சிறுபிள்ளையும் வித்தியாசமானவனாக இருக்கிறபடியால் திட்டவட்டமான விதி எதையும் நிறுவ முடியாது. கிறிஸ்தவ பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய பயற்சியைக் கொடுப்பதை இந்த உலகத்தில் முன்னுரிமை பெற்ற காரியமாகக் கருத வேண்டும் என்பதே முக்கியமானதாகும்.

### உங்கள் பிள்ளைகளிடம் அன்புகாட்டுவதற்குப் பத்து விதிகள்

1]. **உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாதிருங்கள்** [பார்க்க, எபே. 6:4]. சிறுபிள்ளைகள் பெரியவர்களைப்போல நடந்துகொள்ளு





வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்களிடமிருந்து நீங்கள் அளவுக்கு அதிகாக எதிர்பார்ப்பீர்களானால், அது முடியாது என்பதை அறிந்து உங்களைப் பிரியப்படுத்த முயலுவதை விட்டுவிடுவார்கள்.

2]. **உங்கள் பிள்ளைகளை மற்றப் பிள்ளைகளோடு ஒப்பிடாதிருங்கள்.** அவர்களுடைய தனிச்சிறப்பான பண்புகளையும், தேவனிடமிருந்து பெற்ற வரங்களையும் நீங்கள் எவ்வளவாகப் பாராட்டுகிறீர்கள் என்பதை அவர்கள் அறியும்படி செய்யுங்கள்.

3]. **அவர்களுக்குப் பொறுப்புக்களைக் கொடுங்கள்.** வீட்டில் அவர்களுக்குப் பொறுப்புக்களைக் கொடுக்கும்போது, வீட்டில் தாங்களும் முக்கியமான பங்கு வகிப்பதை அவர்கள் அறிய முடியும். காரியங்களைச செய்து முடிப்பது சுயமதிப்பைக் கட்டியெழுப்பும் செங்கல்களாக இருக்கின்றன.

4]. **உங்கள் பிள்ளையோடு நேரம் செலவழியுங்கள்.** இது உங்களுக்கு அவர்கள் முக்கியமானவர்கள் என்பதை அவர்கள் அறியும்படி செய்கிறது. உங்களை நீங்கள் அவர்களுக்குக் கொடுப்பதற் குப் பதிலாகப் பொருட்களை வாங்கிக்கொடுப்பது போதுமானது அல்ல. மேலும், பிள்ளைகள் யாரோடு அதிகமான நேரத்தைச் செலவழிக்கிறார் களோ அவர்களுடைய தாக்கத்தைப் பெறுகிறார்கள்.

5]. **எதிர்மறையான எதையாவது நீங்கள் சொல்ல வேண்டியிருக்குமானால், அதை ஆக்கபூர்வமான வழியில் சொல்ல முயலுங்கள்.** எனது பிள்ளைகள் எனக்குக் கீழ்ப்படியாமல் போகும்போது நான் ஒருபோதும் அவர்கள் ''மோசமானவர்கள்'' என்று சொன்ன தில்லை. மாறாக, நான் என் பையனிடம் ''நீ ஒரு நல்ல பையன். நல்ல பையன்கள் இப்போது நீ செய்ததுபோன்ற காரியங்களைச் செய்ய மாட்டார்கள்'' என்று சொல்லிவிட்டு அவனுக்குப் பிரம்படி கொடுப்பேன்.

6]. **''கூடாது'' என்ற சொல்லுக்கு ''நான் உன்மீது அக்கறை கொண்டிருக்கிறேன்'' என்பதே அர்த்தம் என்பதை உணர வையுங்கள்.** பிள்ளைகளின் விருப்பத்துக்கு எப்போதுமே இடம் கொடுத தால், நீங்கள் அவர்கலைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு அவர்கள்மீது அக்கறை காட்டவில்லை என்பதை அவர்கள் புரிந்துகொள்ளுவார்கள்.

7]. **உங்கள் பிள்ளைகள் உங்களைப்போலச் செய்வதை எதிர் பாருங்கள்.** சிறுபிள்ளைகள் தங்கள் பெற்றோரின் முன்மாதிரியிலிருந்து கற்றுக்கொள்ளுகிறார்கள். ஞானமுள்ள பெற்றோர் தங்கள் பிள்ளை களிடம் ''நான் சொல்லுதைச் செய், நன் செய்வதைச் செய்யாதே'' என்று ஒருபோதும் சொல்ல மாட்டார்கள்.

8]. **உங்கள் பிள்ளைகளை அவர்களுடைய பிரச்சினைகளி லிருந்து வெளியே எடுக்காதீர்கள்.** தடைக்கற்களை மட்டும் அகற்றுங் கள் படிக்கட்டுகளை அவர்களுடைய பாதையில் விட்டுவிடுங்கள்.

**9). உங்கள் முழு இருதயத்தோடும் தேவனைச் சேவியுங்கள்.** ஆவிக்குரிய பிரகாரமாக அனலோ குளிரோ இல்லாமலிருக்கும் பெற்றோரின் பிள்ளைகள் வளர்ந்தபிறகு தொடர்ந்து தேவனைச் சேவிப்பதில்லை என்பதை நான் கண்டிருக்கிறேன். இரட்சிக்கப்படாத பெற்றோரின் கிறிஸ்தவப் பிள்ளைகளும், முழுமையான ஒப்படைப்பைக் கொண்ட கிறிஸ்தவப் பெற்றோரின் பிள்ளைகளும் இயல்பாகவே ''கூட்டைவிட்டு வெளியேறிய பிறகும்'' தேவனைச் சேவிபபதைக் காணலாம்.

**10). உங்கள் பிள்ளைகளுக்குத் தேவனுடைய வார்த்தையைப் போதியுங்கள்.** பெற்றோர் பெரும்பாலும் தங்கள் பில்லைகளின் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தாலும், மிக முக்கியமான கல்வியை மறந்து விடுகிறார்கள். அவர்கள் வேதாகமப் போதனையைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

## ஊழியம், திருமணம் மற்றும் குடும்பத்தின் முன்னுரிமைகள்

பல கிறிஸ்தவத் தலைவர்கள் தங்கள் ஊழியத்தில் அதிகமான ஒப்படைப்புக் கொண்டிருக்கிறபடியால், தங்கள் திருமணத்தையும் குடும்பத்தையும் புறக்கணித்துவிடுவதே மிகவும் பொதுவாகக் காணப்படும் பிழையாகும். தாங்கள் ''ஆண்டவருடைய ஊழியத்துக்காக'' தியாகம் செய்வதாகச் சொல்லி தங்களைத் தாங்களே நியாயப்படுத்திக்கொள்ள முயலுகிறார்கள்.

சீஷர்களை உருவாக்கும் ஊழியர் தனது மெய்யான கீழ்ப்படிதலும் தேவன்மீதான பயபக்தியும், தனது மனைவி மற்றும் பிள்ளைகளோடுள்ள உறவுகளில் பிரதிபலிக்கிறது என்பதை உணரும்போது இந்தப் பிழைக்குத் தீர்வைக் காண முடியும். கிறிஸ்து தமது சபையிடம் அன்புகாட்டுவது போலத் தனது மனைவியிடம் அன்புகாட்டாத ஒரு ஊழியர் அல்லது கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் சிறு பிள்ளைகளை வளர்க்கும்படி அவர்களோடு நேரம் செலவழிக்காத ஒரு ஊழியர் தான் தேவனிடம் பயபக்தியாக நடந்துகொள்ளுவதாகச் சொல்ல முடியாது.

மேலும், ''ஊழியத்துக்காக'' தனது மனைவியையோ அல்லது கணவனையோ, பிள்ளைகளையோ புறக்கணிப்பது ஒருவர் தனது சொந்த பலத்தில் செய்யும் மாம்சீக ஊழியத்தின் நிரூபணமாகவே இருக்கிறது. அதிகமான வேலைப் பளுவைச் சுமக்கும் அமைப்புரீதியான சபைப் போதகர்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள். தங்கள் சபையின் எல்லாச் செயல்திட்டங்களும் நன்றாக நடக்க வேண்டும் என்பதற்காகக் கடுமையாக உழைத்து அவர்கள் சோர்ந்து போகிறார்கள்.





தமது நுகம் மெதுவாயும், தமது சுமை இலகுவாகவும் இருக்கிறது என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார் (பார்க்க, மத். 11:30). எந்தவொரு ஊழியரும் தனது குடும்பத்திடம் அன்புகாட்டுவதற்குப் பதிலாக உலகத்துக்கோ அல்லது சபைக்கோ தனது பயபக்தியைக் காட்ட வேண்டும் என்று அவர் அழைக்கவில்லை. உண்மையில், ஒரு மூப்பர் தனது சொந்தக் குடும்பத்தை நன்றாக நடத்துகிறவராக இருக்க வேண்டும் என்பதே எதிர்பார்க்கப்படுகிறது (1 தீமோ. 3:4). அவர் ஊழியத்துக்குப் பொருத்தமானவராக இருக்கிறாரா என்பதற்குத் தனது குடும்பத்தோடு அவர் கொண்டிருக்கும் உறவு ஒரு சோதனையாக இருக்கிறது.

பயணம்செய்ய வேண்டியிருக்கும் அல்லது வீட்டைவிட்டு அதிகமான காலம் வெளியே தங்க வேண்டியிருக்கும் ஊழியங்களைச் செய்கிறவர்கள் வீட்டுக்குத் திரும்பும்போது, அதிகமான நேரத்தைத் தங்கள் குடும்பத்தோடு செலவிட வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தின் சக உறுப்பினர்கள் தங்களால் முடிந்தவரையில் இது சாத்தியமாகும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். தனது சொந்தப் பிள்ளைகளே தனது முதல் சீஷர்கள் என்பதைச் சீஷர்களை உருவாக்கும் ஊழியர் புரிந்து கொண்டிருக்கிறார். இந்தப் பணியில் அவர் தோற்றுப்போவார் என்றால், வீட்டுக்கு வெளியே சீஷர்களை உருவாக்க முயற்சிசெய்வதற்கு அவருக்கு எந்த உரிமையும் இல்லை.

